**செ. கு. எண்: 240** **நாள்: 27.12.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் அறிக்கை - 27.12.2018

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், எக்கல் கிராமத்தில், "கஜா" புயலால் சேதமடைந்த மின் கம்பங்களை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இன்று (27.12.2018) எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், திருமலைப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜோக்கப் என்பவரின் மகன் திரு. தாவீது ராஜன் என்கிற டேவிட் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

**"கஜா"** புயலின் தாக்கத்தினால் பாதிப்படைந்த மின் கம்பங்களை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, விபத்தில் உயிரிழந்த திரு. தாவீது ராஜன் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் **குடும்ப நிலையை கருத்தில் கொண்டு, சிறப்பினமாக,** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **10 லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K.பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**